# தேசிய தோட்டக்கலை வாரியம்

## (National Horticulture Board)

## தேசிய தோட்டக்கலை வாரியத்தின் மானிய திட்டங்கள்



### தமிழ்நாடு அலுவலகம்


**துணை இயக்குநர்**
**தேசிய தோட்டக்கலை வாரியம்**
வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம், இந்திய அரசு,
எண். 37, சிட்கோ ஆயத்த ஆடை வளாகம், தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-600032
தொலை பேசி : 044-22500965 ; மின்னஞ்சல்: tn.nhb@gov.in, nhbtn32@gmail.com
இணையதளம்: www.nhb.gov.in


### தலைமை அலுவலகம்


**மேலாண்மை இயக்குநர்**
**தேசிய தோட்டக்கலை வாரியம்**
வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம், இந்திய அரசு,
எண். 85 இன்ஸ்டிடுசனல் ஏரியா, செக்டார் 18, குருகிராமம் - 122015, ஹரியானா.
தொலைபேசி: 0124-2342992; மின்னஞ்சல்: md@nhb.gov.in, jd.south.nhb@gov.in, sho.south.nhb@gov.in
இணையதளம்: www.nhb.gov.in

**நோக்கம் :**

தேசிய தோட்டக்கலை வாரியம் (NHB) 1984 ல் இந்திய அரசாங்கத்தால் விவசாயம் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் ஒரு தன்னாட்சி அமைப்பாக அமைக்கப்பட்டது மற்றும் குரு கிராமில் அதன் தலைமையகத்துடன் சங்கங்கள் பதிவுச்சட்டத்தின்கீழ் ஒரு சங்கமாக பதிவு செய்யப்பட்டது. தற்போது, NHB நாடு முழுவதும் 29 அலுவலகங்களைக் கொண்டுள்ளது. வாரியத்தின் பரந்த நோக்கங்கள் மற்றும் நோக்கங்கள் ஒருங்கிணைந்த உயர்தர வணிக தோட்டக்கலைக்கான உற்பத்திக் கூட்டங்கள்/ஹப்களை உருவாக்குதல், அறுவடைக்குப் பிந்தைய மற்றும் குளிர் சங்கிலி உள்கட்டமைப்பு மேம்பாடு, தரமான நடவுப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்தல் மற்றும் புதிய தொழில் நுட்பங்கள்/கருவிகள்/தொழிற்நுட்பங்களை பின்பற்றுவதை ஊக்குவித்தல். உயர் தொழில்நுட்ப வணிக தோட்டக்கலை போன்றவை

## தேசிய தோட்டக்கலை வாரியத்தின் திட்டங்கள்

### திட்டம்1: தோட்டக்கலை பயிர் உற்பத்தி மற்றும் அறுவடைக்கு பின் மேலாண்மை மூலம் வணிக தோட்டக்கலை வளர்ச்சி

*1.1. தோட்டக்கலை பயிர்களை திறந்த வெளியில் பயிரிடும் முறை மூலம் வணிக தோட்டக்கலை வளர்ச்சி (Open field cultivation)*

- குறைந்தது பயிர் பரப்பு 5 ஏக்கருக்கு மேல் இருக்க வேண்டும்.
- நெல்லி, அன்னாச்சி, வாழை, தென்னை, எலுமிச்சை, இலந்தை, திராட்சை, அத்தி, சீதாபழம், கொய்யா, மா, பப்பாளி, மாதுளை, சப்போட்டா, பலா, முந்திரி, புளி, ஆப்பிள், ஏப்ரிகாட், ஆலிவ், ஆரஞ்ச், பீச், பேரி, பிலம்ஸ், ஸ்டாபெரி, வால்நட்,கிவி, பேரிச்சை, கருப்பு மிளகு, இலவங்க பட்டை, சிட்ரோனெல்லா, ஜெரானியம், ஸ்டீவியா, பால்மரோசா, செலரி ஆகிய பயிர்கள் மானிய பெற தகுதி உடையவை ஆகும்
- திட்ட மதிப்பில் 40% மானியம், அதிகபட்ச மானியம் ரூ.30லட்சம் ஆகும்.
- கடனுடன் இணைந்த இறுதி நிலை மானியம் (back ended subsidy)



*1.2. பாதுகாக்கப்பட்ட சாகுபடி முறையில்*

உயர் மதிப்புள்ள தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி (Poly House)

- மலர் பயிர்களான ஆந்தூரியம், ஆர்கிட், ரோஜா, லில்லி, சாமந்திபூ, கார்னேசன், ஜெர்பெரா மற்றும் காய்கறி பயிர்களான கலர் குடை மிளகாய், வெள்ளரி மற்றும் தக்காளி ஆகிய பயிர்கள் மானியம் பெற தகுதி உடையவை ஆகும்.
- திட்ட மதிப்பில் 50% மானியம், அதிகபட்ச மானியம் ரூ. 56 லட்சம் வரை.
- கடனுடன் இணைந்த இறுதி நிலை மானியம் (back ended subsidy)



*1.3 ஒருங்கிணைந்த அறுவடை பின் மற்றும் ஆரம்ப பதனிடுதல் நிர்வாக திட்டம்*

| வ. எண் | விவரம் | திட்ட மதிப்பு | மானிய விவரம் |
|---|---|---|---|
| 1 | சிப்பம் கட்டும் அறை (Pack House) | ரூ.4லட்சம்/அலகு (9மீ x 6மீ) | @ 50% மானியம் |
| 2 | ஒருங்கிணைந்த சிப்பம் கட்டும் அறை (Integrated Pack House) | ரூ.50லட்சம்/அலகு (9மீ x 18மீ) | @35% மானியம் |
| 3 | பழுக்க வைக்கும் கூடம் (Ripening Chamber) | ரூ.1லட்சம்/மெ.டன் | @35% மானியம் |
| 4 | குளிரூட்டு வசதியுள்ள வாகனம் (Reefer Van) | ரூ. 25 லட்சம் | @35% மானியம் |
| 5 | விற்பனையகம் (Retail Outlet) | ரூ.15லட்சம்/அலகு | @35% மானியம் |
| 6 | முன் குளிரூட்டும் அலகு (Pre Cooling Unit) | ரூ.25லட்சம்/6 மெ.டன் | @35% மானியம் |
| 7 | குளிர் சாதன அறை (Cold Room) | ரூ.15லட்சம்/30 மெ.டன் | @35% மானியம் |
| 8 | ஆரம்ப பதனிடுதல் அலகு (Primary Processing) | ரூ.25லட்சம்/அலகு | @35% மானியம் |

- திட்ட மதிப்பில் 35% மானியம் அதிகபட்ச மானியம் ரூ.50.75 லட்சம் வரை.

## திட்டம் 2. குளிர்சாதன கிடங்கு அமைத்தல் / விரிவாக்க செய்தல் நவீனப்படுத்துவதற்கான முதலீட்டு மானிய திட்டம்

- குறைந்தது 5000 மெ. டன் கொள்ளளவு முதல் 10000 மெ.டன் கொள்ளளவு வரை மானியம் பெறலாம்.

| வ. எண் | குளிர்பதனகிடங்குவகைகள் | கொள்ளளவுமற்றும்திட்டமதிப்பு (ரூ.) |
|---|---|---|
| 1 | குளிர்பதன கிடங்கு வகை -1 மெசனைன் தரைகளை கொண்ட பெரியஅறை | 5000 மெ.டன் வரை ரூ.8000, 5001 முதல் 6500 மெ.டன் வரை ரூ.7600, 6501 முதல் 8000 மெ.டன் வரை ரூ.7200, 8001 முதல் 10000 மெ.டன் வரை ரூ.6800. |
| 2 | குளிர்பதன கிடங்கு வகை -2 நிர்ணயிக்கப்பட்ட தரத்துடன் கூடிய பொறியியல் கட்டுமானம் | 5000 மெ.டன் வரை ரூ. 10000, 5001 முதல் 6500 மெ.டன் வரை ரூ.9500, 6501 முதல் 8000 மெ.டன் வரை ரூ.9000, 8001 முதல் 10000 மெ.டன் வரை ரூ.8500. |

- திட்ட மதிப்பில் 35% மானியம்.
- கடனுடன் இணைந்த இறுதி நிலை மானியம் (back ended subsidy)





**தேசிய தோட்டக்கலை வாரியம் மூலம் மானியம் பெற எளிய வழிமுறைகள்:**

- தேசிய தோட்டக்கலை வாரியத்தின் புதிய வழிகாட்டு நெறிமுறைகள் மார்ச் 15 2023 முதல் தொடங்கப்பட்டுள்ளது. இதில் இனிமேல் முதன்மை ஒப்புதல் (IPA) பெறத்தேவை இல்லை 15-03-2023 க்கு முன் பெறப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்கனவே உள்ள முறைப்படி பின்பற்றப்படும் இனிமேல் நேரடியாக விவசாயிகள் அனுமதி சான்றுக்கு (Grant of Clearance) www.nhb.gov.in இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். அனுமதி சான்று பெற கீழ்கண்ட ஆவணங்களை சமர்பிக்க வேண்டும் 1. விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) 2. வங்கி அனுமதி கடிதம் (Bank Sanction Letter) 3. வங்கி மதிப்பீட்டு குறிப்பு (Bank Appraisal Note) நில ஆவணங்கள் (Land Document)
- இணையதளத்தில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு விண்ணப்பதாரருக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பப்படும். அதேபோல் சம்மந்தப்பட்ட வங்கிக்கான உறுதிப்படுத்தல் இணைப்பு அனுப்பப்பட்டு உறுதி செய்தவுடன் அனுமதி சாற்று (GoC) வழங்கப்படும்.

மேலும் கூடுதல் விவரங்களுக்கு :www.nhb.gov.in
இணையத்தை பார்க்கவும்

NHB WEBSITE

NHB HEAD OFFICE

NHB CHENNAI


தொடர்பு கொள்ள
**துணை இயக்குநர்,**
தேசிய தோட்டக்கலை வாரியம்,
கிண்டி சென்னை 600 032
தொலைபேசி : 044 - 22500965




